ஓலை 35 | ஓசை 131 | மார்ச் 2023

அகர முதல இலக்கிய பேரவை
அகமும் தமிழே!
முகலும் தமிழே!!

# அகர முதல இலக்கிய பேரவை



## கவிதை வார இதழ்

தமிழ்ப்பணியில்: அகர முதல இலக்கிய பேரவை (ம) சிவம் அறக்கட்டளை

# அறிவோம் வள்ளுவம்!



**வேட்பத்தாஞ் சொல்லிப் பிறர்சொற் பயன்கோடல்
மாட்சியின் மாசற்றார் கோள்.**

பிறர் விரும்பும் படியாகத் தாம் சொல்லின் பிறர் சொல்லும் போது
அச் சொல்லின் பயனை ஆராய்ந்து கொள்ளுதல் மாசற்ற
சிறப்புடையவரின் கொள்கையாகும்.

**Translation:**

Charming each hearer's ear, of others'
words to seize the sense,
Is method wise of men of spotless excellence.

**Explanation:**

It is the opinion of those
who are free from defects in diplomacy that
the minister should speak so as to make his hearers
desire (to hear more) and grasp
the meaning of what he hears himself.

/Aagaramuthalaa

அகர முதல இலக்கிய பேரவையில்
இணைய-9597887847

அகர முதல இலக்கிய பேரவை

அகரமும் தமிழே!
முதலும் தமிழே!!

நிர்வாக குழு

கு.செல்வமுத்துக்குமரன்

சிவம் அறக்கட்டளை

ஆசிரியர்கள்

அ.வில்சன்

குமர.தர்மசீலன்

வடிவமைப்பு

அ.வில்சன்

## அலுவலக முகவரி


97, குஞ்சிதபாதம் நகர், டவுன் ஸ்டேசன் தென்புறம்,
மயிலாடுதுறை - 609001


# அகர முதல இலக்கிய பேரவை


Aagaramuthalaa www.அகரமுதல.com aagaramuthala@gmail.com

# வளர்ப்பு உயிரினங்கள்

(நேரிசை ஆசிரியப்பா)

கன்றின் இன்முகம் கவலை குறைக்க
அன்பின் முத்தம் அணைத்துக் கொடுக்க
மாட்டுத் தொழுவம் மாடி வீடே!
ஆட்டுத் தொழுவம் ஆயரின் சொர்க்கமே!
ஏதும் இல்லா ஏழை
போது மென்றே போற்றி வாழ்வாரே!



கவிஞர் ஸ்ரீவி.முத்துவேல்,சென்னை

# வாடகைக் கதாபாத்திரங்கள்!

தன்னலம் ஒன்றையே
தானாக்கிக் கொண்டே

உள்ளம் சொல்வதைக்
கள்ளமாய் மறைத்து

உலகமேடையில் உலாவரும்
பொய்யான மெய்யில்

பொய்யாய் நடித்து
மெய்யை மறைத்து

பார்ப்போர் இடத்து
பாங்காய்க் குழைந்து

நடமாடும் எத்தர்கள்
படமாடும் பாம்பாய்

நஞ்சை நாவில் தடவி
நெஞ்சில் வஞ்சம்

வைத்தே முதுகில்
குத்திச் சாய்த்திடுவர்.

தன்வினைத் தன்னைத்
திருப்பிச் சுட்டும் போதில்

தவறினை உணர்ந்து
பரிகாரம் தேடிடுவர்.

கண் கெட்ட பிறகு
கதிரவன் வணக்கமெதற்கு?

நிலையாமை நிலைத்த
உலகில் வாழ்க்கை ஒருமுறையே!

பிறர் உழைப்பைச்
சுரண்டி வருத்தாமல்

மெய் முகத்தோடு வாழ்ந்திட
முயன்றிடுங்கள்.

தாயின் வயிற்றில்
தந்தையின் விந்தணுவால்

வாடகை மெய்யில்
வளர்ந்துப் பிறக்கிறோம்.

நம் எண்ணங்களால்
வாழப் பழகுகிறோம்.

நல்லெண்ணம்
கொண்டால்
நயன்மையோடு
நலமாய் வாழ்க்கை.

எதிர்மறை எண்ணம்
கொண்டால்
பிணியோ குடி புகும்.



வாடகைக் கதாபாத்திரம்
விரைந்தே ஏகும்.

பற்றற்று இருப்பதைப்
பகிர்ந்து வாழ்ந்திட

அறத்தால் பொருளீட்டி
இன்பத்தைத் துய்த்திட

முகமூடி அணியா
மெய்ஞ்ஞானச் சித்தராகலாம், நாம்.

கவிஞர் செ.கலைவாணி,மேட்டூர்அணை

# கொல்லாமை

அதிகாரம் : 33



எவ்வுயிரையும் கொல்லாதே
உன்னுயிர்போல் காத்துநில்.
இவ்வறத்தை மறந்தால்
பெருந்தீமை விளையும்.

உன்னுணவைப் பங்கிட்டு
பல்லுயிர்களைக் காத்திடுதல்.
அறநூலோரின் அறத்திலெல்லாம்
மிகச்சிறந்த அறமாம்.

கொல்லாமை என்பதெல்லாம்
நல்லறம் எனப்படும்.
அதற்கடுத்த அறமென்றால்
பொய்யாமை ஆகுமது.

அறநூல் கூறும்
நல்வழிகள் ஏதென்றால்.
உயிர்க்கொல்லா அறத்தினை
நினைக்கும் நெறியாகும்.

வாழ்க்கையை அஞ்சி
துறந்தோர் யாவரிலும்.
கொலைபாதகம் தவிர்க்கும்
நெறிபோற்றுவோரே சிறந்தோராம்.

கொல்லாமை கடைபிடித்து
ஒழுகுபவன் வாழ்நாளை.
உயிர்த்தின்னும் கூற்றுவன்
கண்வைக்க மாட்டான்.

தன்னுயிர் நீங்கிடும்
நிலைதான் ஏற்படினும்.
இன்னுயிர் கொல்லும்
மாபாவம் செய்யாதிரு.

இன்னுயிர் கொல்வதால்
பேராக்கம் வந்திடினும்.
சான்றோர்க்கு அவ்வாக்கம்
அறுவறுக்கத்தக்க இழிவாகும்.

கொல்லும் தொழிலுடையோர்
நல்லறம் ஒழுகுவோர்முன்.
இழிந்த செயலினராகவே
என்றும் தோன்றுவர்.

நோய்கொண்டு உயிர்வதைத்து
வறுமையில் துன்புறுவோர்.
முன்னாளில் கொன்றுதின்று
வாழ்ந்திருப்பரென்பது அறிஞர்கூற்று.

கவிஞர் ஆன்றனி ஜமுனா,நாகர்கோவில்

# காலம்

அன்றாடம்
பார்ப்பவர்களிடத்தில்
இருந்தும்
பழகுபவர்களிடத்தில்
இருந்தும்
பலவற்றை
கற்றுக்கொள்கிறோம்
அவர்களின் அனுமதியின்றி.

என்னிடம் இருக்கும்
சில பழக்க வழக்கங்கள்
இப்படித் தாவியிருக்கலாம்
வேறொரிடத்திற்கு.

இது
என்னுடையதென்று
தம்பட்டமடிப்பவர்கள்
சற்றே யோசிக்க வேண்டும்.

காட்சிகளை
மாற்றிக்கொண்டே இருக்கின்றது
காலம்.

இன்னொருவரிடம்
இருந்து எனக்கும்.
என்னிடம் இருந்து
மற்றவர்க்கும்.
அனைத்தையும்
பிடுங்கிக்கொடுத்து
கொண்டிருக்கின்றது
எப்போதும் காலம்.



கவிஞர் பாரியன்பன் நாகராஜன்,குடியாத்தம்

# ஆயுள்!

மூன்றெழுத்தில் முக்காடு போர்த்தி
முட்டித்தள்ளும் கருவறையில் ஆரம்பமாகி
மூன்று பிடி மண் எடுத்து
தூவி மூடும் கல்லறை வரை
நடமாடும் காலமே ஆயுள்



கண்ணிமைக்கும் பொழுதில்
ஆயுள் ஆரம்பமாகிறது சிலருக்கு
அதே ஆயுள் முடிகிறது
இன்னும் சிலருக்கு

இதற்கிடையில் வாழும் மனிதமே
நீ மறவாதே ஆயுள் என்பது
குறுகிய கால வாழ்க்கை
அது கண்ணிமைக்கும் நொடியில்
கரைந்து காணாமல் போய்விடும்

மண்ணுக்கும் பொண்ணுக்கும் சண்டையிட்டு
தன் ஆயுளின் அர்த்தமே தெரியாமல்
தன் வாழ்விற்கு முற்றுப்புள்ளி இடுவதைவிட


அன்பு நிறைந்த இவ்வுலகில்
அன்பு கரம் கோர்த்து
வாழ்ந்து விட்டு செல்
உன் ஆயுள் மறைந்தாலும்
பிறர் இதயங்களில் பூத்த நீ
என்றும் மறையவே மாட்டாய்

கவிஞர் அகிலா ஜவுபர்,ஏத்தாளை புத்தளம் இலங்கை

# காலைக் காட்சி

காலைக் கதிரவன் காட்சி இதனைக்
காண்பதற்கு வேண்டும் கண்கள் கோடி!
கன்னியா குமரியா செல்லவேண்டு மிதனைக்கான
கோவில்பட்டியில் என்னில்லம் வாருங்கள் நன்றாய்க்காண!

சூரிய உதயம் சூரிய மறைவுகாண
சுறுசுறுப்பாய்க் கூடிடும் கூட்டத்தைக்
கன்னியா குமரியில் கண்டதுண்டு அடியேன்!
கண்கொள்ளாக் காட்சியதுவென பற்பலரும் சொல்லிச்சொல்லி
காணவேண்டுமதனை எனவடியேன் எண்ணிசிலமுறை சென்றதுண்டு;
காத்திருத்தல் என்பதங்கும் அலுப்பாகிப் போகும்!
மேகம் மறைத்திட சூரியவுதயம் கானல் நீராகும்!
மனிதப்பெருந்திரள் புலம்பியே உடைந்து சிதறும்!
என்னில்லம் வாருங்கள் எழிலார்ந்த சூரியவுதயம்
எந்நாளும் காணமுடியா விட்டாலுமதை காணலாம்
எண்ணரிய நாட்கள் இனிதாய்க் கிழக்குவானில்!



பழக்கூடையாம் வானத்தில் இருந்து எட்டிக்குதிக்க
பரவசமாய்த் தயாராகும் ஆரஞ்சுப்பழ அழகுகாட்டி
மெல்லமெல்ல மேலேறும்போது கால்பந்தாய் தோற்றம் தந்து
மனத்தில் மத்தாப்பு பூரிப்பு தந்திடும்
ஆதவன் காண வாருங்கள் என்னில்லம்;
அடிதடியின்றி ஆதவன் தரிசனம் பெறலாம்!

மேற்கு வாசல்கொண்டது அடியேன் இல்லம்;
மறவாது தரிசனம்தருவான் மாலையிலும் மறையும்முன்பு;
என்னில்ல வாசல்முன் வந்தே ஆதவனும்;
எற்பாடு பொழுதினில் படுக்கவிடம் வேண்டுபவனாய்
என்னில்லத்துள் வரலாமாவென அனுமதியவன் கேட்பதைக்காணலாம்!

நாம்வாழும் இவ்வுலகின் தாயும் தந்தையுமானவன்,
நலந்தரட்டும் நானிலம் வாழ்வோர் யாவருக்கும்;
சூரியநாரா யணனே சிவசூரியனே என்றுதுதித்து
சுடருமறிவொளி வேண்டித் தொழுவோம் வாருங்களேன்!

கவிஞர் தீந்தமிழ் திருமலைக்குமரன் அருணாச்சலம்,கோவில்பட்டி

# நடைபோடுவோம்

இதயம் இடமாற்றியவனே
இதயம் பாதுகாப்போம்
ஒன்றாய் இணைந்து!

காலை நேர நடைப்பயிற்சி
வாழும் காலத்தை
கூட்டும் பயிற்சி!

எண்ணத்தை ஒருமுகப்படுத்தி
செஞ்சுடர் கதிரை உள்வாங்கி
புது காற்றை சுவாசித்து
வியர்வை நாளங்களை திறந்து
நரம்பு மண்டலத்தை புதுப்பித்து
இரத்த நாளங்களை சீராக்கி
கரம் சுழற்றி விரல் விரித்து
குறைந்த நேரம் அதிக தூரம்
நடைபோடுவோம்.



திரவ எறும்பு போல் ஊர்ந்து
வழியட்டும் வியர்வை
அதை இயற்கைக் காற்றில்
மட்டுமே உலர விடுவோம்.

ஒவ்வொரு இரவும் இவை
என் வேண்டுகோள்.
ஒவ்வொரு காலையும் முடிகிறது.
என் நடைபயிற்சி தனிமையில்
காதோரம் ஒலிக்கும்
எனக்கான இன்னிசையோடு!

காரைக் கவிஞர் எழிலி

# அம்மா

பத்து மாதம் சுமந்த உறவு
உதிரத்தை பாலாய் தந்த உறவு
தனக்கு எந்த கஷ்டம் வந்தாலும்
வெளியே காட்டிக் கொள்ளாத உறவு
தன் பிள்ளைக்காக எதையும் தாங்கும் உறவு
மூன்றெழுத்தில் தேவதையாய் வந்த உறவு
மகள் மகனின் கூடவே பாசமாய் வரும் உறவு
காயங்கள் பல மனதில் இருந்தாலும்
பெற்றவள் இடமே தீர்வுக் காண
ஆறுதல் கொடுக்கும் உறவு
வலிகள் பல அவள் மனதில் இருந்தாலும்
புன்னகையால் வரவேற்கும் உறவு
அம்மா கண் கண்ட தெய்வம்
அவரோடு இருந்த நாள் வரை
நம் வாழ்வு சொர்க்கமே
ஆறுதலாய் இருந்து அவர்களை
வழி நடத்துவோம்
வாழும் வரை பாதுகாப்போம்



கவிஞர் ம.செ.அ.பாமிலா பேகம்,நாகர்கோவில்

# பக்குவம்

பக்குவம் நாம் என்றும் அதன்
பக்கம்இருந்தாலேநல் தனம்
மக்களுக்கு தேவை இது
எக்காரணம்கொண்டு தவிர்க்காது

உடன் இருந்தே இது நன்மை காக்கும்
உடன்பிறப்பை விட வலிமை
கடன்படாது இதன்படி வாழலாம்
திடமுடன் இதில் நாம் தினம் மகிழலாம்



ஏற்பது கடினமாகத்தான் இருக்கும்
ஏற்றபின் ஏற்றமே தினம் தரும்
பெற்றதை விட உடன் வரும்
போற்றி நமை வாழவைக்கும்

லட்சியங்களே என்றும் நமக்கு சொத்து
அலட்சியம் கொள்ளாது நீ ஏத்து
சாட்சிகளாய் இது நிற்கும்
சாதனைத் தந்து நம்மை வாழ்த்தும்

வாழ்க்கையில் இதை தெரிந்து கொள்
வாழ்வினில் எதிலும் வெற்றி கொண்டு
வாழ்வினில் எதையும் எடுத்துச் செல்லவே முடியாது
வாழ்ந்து முடிந்து நாம்
எல்லா வற்றையும்
விட்டுசெல்வதே நடக்கும்

கவிஞர் அஞ்சல் தஞ்சை தாசன்,மடிப்பாக்கம் 91

# உன்னை நீ அறிவாய்

உன்னால் முடியும் இளைஞனே
நம்பிக்கை என்ற மந்திரத்தை
மனதில் நிறுத்து.
உன்னை நீ அறிவாய்.

பொய்மை விடுத்து
வாய்மையுடன் பழகு
உன்னை நீ அறிவாய்

பண்புடன் பழகு பகுத்தறிவு
உன்னை பக்குவபடுத்தவே.

மூட நம்பிக்கையை மூலையில் போடு.




பெண்மையைப் போற்று
தேசத்தை நேசி.
உற்றார் உறவினரோடு பழகு
ஆணவத்தை அழி
அகந்தையை ஒழி
அறத்தை செயலில் காட்டு
உன்னை நீ அறிவதுடன்
உலகமும் உன்னை அறியும்!

கவிஞர் சுமதி தசதரன்,சென்னை

# வீறு கொண்டெழு மனமே

வீறு கொண்டெழு
வீணர்களை வீழ்த்திடு

தீமைகளை ஒழித்திடு
தீதில்லாமல் வாழ்ந்திடு

தீசொல்லை நீக்கிடு
தீயோர்களை தீர்த்திடு

இறை சந்நிதியில்
இணைந்தே இன்பமாயிரு

இல்லாத மாந்தருக்கு
இருப்பதை கொடுத்திடு



கவிஞர் இரஜகை நிலவன், மும்பை

அகர முதல

# பெண் என்னும் பேராளுமை

திறமையெனும் ஆயுதத்தால்
இவ்வுலகினை ஆளும் பெண்ணே

அடுப்பூதி அடைப்பட்ட
நாட்களை தகர்த்து

அன்பெனும் பண்பில்
உயிர்களை உறவாக்கி

ஓயாத முயற்சியில்
தடைகளை உடைத்து

எட்டாத உயர்கல்வியால்
சாதித்த சரித்திரமே

உனக்குள் விழுந்த கல்விச்சுடரால்தான்
உலகுக்கே வெளிச்சம்

விளையாத மண்ணையும்
பொன்னாக்கும் பொன்மகளே

விண்ணிலும் விஞ்ஞானத்தால்
மின்னிய விண்மீனே

சாமானியனும் சரியாமலிருப்பது
உன்வார்த்தைச் சட்டத்தால்

பூமியும் உன்னிடம் கற்ற
பொறுமையெனும் மந்திரத்தால்

பாரினில் புரிந்தாய்
புரட்சியும் புதுமையும்

உன்விழியாலும் விரலாலும்
விழுந்த துறையையும் சிறப்பாக்கி

நலிவுற்ற எண்ணங்களை
வண்ணங்களாக்கிய வானவில்லே

மலிவான அரசியலும் மகத்தானது
உன்போன்ற ஆளுமையால்

கலப்பையும் கணினியும்
உன் கைவிரலுக்குள் கவிபாட

மண்ணும் விண்ணும்
வியந்திட விளையும்

பெண்ணென்னும்
பேராளுமையின் முன் விழுந்தவரோ
ஏராளம்.

கவிஞர் கோவை ஆனந்தன்,கிணத்துக்கடவு

# பெண் என்னும் பெருந்தீ

பெண்ணவளின் அன்போ
மனதிற்கு குளிர்ச்சியாம்.

பெண்ணவளின் கருணையோ
அப்பழுக்கில்லா நிரந்தரமாம்.

பெண்ணவளின் கண்டிப்போ
நன்னடத்தையின் வெளிப்பாடாம்.

பெண்ணவளின் கம்பீரமோ
நேர்மையின் பிறப்பிடமாம்.

பெண்ணவளின் வெற்றியோ
வலிகளூடேயான போராட்டமாம்.

பெண்ணவளின் உழைப்போ
நீடித்திருக்கும் செல்வமாம்.

பெண்ணவளின் சுறுசுறுப்பால்
தோல்வியும் தோற்றிடுமாம்.

பெண்ணவளின் விடாமுயற்சியால்
வெற்றிக்கனியும் அவளிடமாம்.



பகைவனை கண்டிட்டால்
பெண்ணெனும் பெருந்தீயானவளோ!
பிறர் நலனுக்காக மாய்த்திடவும் தயங்காள்.

பெண்ணவளைக் கொண்டாடுங்கள்
அகம் மகிழ்ந்திடுவாள்

அன்பைக் கொட்டிக் கொடுங்கள்
அரவணைத்து காத்திடுங்கள்

கவிஞர் இரா.கோமதி,பொள்ளாச்சி

# உடலினை உறுதிசெய்

நரம்புகள் புடைக்க
எதிரிகள் தெரிக்க
பார்வையே போதும் படைகள் நடுங்க
உடலை உறுதி செய்
வேகம் கொள்
மோகம் விடு
முயற்சி எடு
பயிற்சி கொள்
தூக்கம் கொள்
ஏக்கம் மற
ஆக்கம் செய்
அழிவை விடு
மனதை மாற்று போர் கொள்ள
உடலை ஏற்று திறம்பட
மனதில் உறுதிகொள் செயல்பட
சிந்தனை கொள் உன்னோடு
செயல்படுத்து பயனோடு
நேரமில்லை துணிச்சலோடு
தூரம் இல்லை சோர்வை விடு
இலக்கை நோக்கி பார்வை இடு
இல்லம் தேடி வாய்ப்பை கொடு
எல்லை இல்லா அன்பை கொடு
எதையும் தாங்கும் இதயம் உன்னோடு
இதயம் இழுக்கும் இரத்தம் உறுதியோடு பாயும்
வயதுமீறி எதையும் செய்தலின்றி ஓயும்
துணிச்சலோடு செயல்படு
துன்பமில்லை ஒன்றுபடு
படைகளை சேர்த்து
தடைகளை உடைத்து
முன்னெடு படையெடு முறையிடு தகர்த்தெறி




கவிஞர் இர மணிகண்டன்,வங்கனூர்

# பாதை செப்பனிடுங்கள்

மரமே மருந்தானாலும்
பட்டுப் போக
பயன் கொள்ளா
தமிழர் பண்பாடு

கட்டவிழ்க்கும்
தொழு ஏறுகள்
கொம்படக்கி
குரவையாடும்
வீரப் பண்பாடு



கற்பில் வழுவா
கணவன் கொண்டு
நெல்லோடும் மலரோடும்
மணமுழவு ஒலித்த
காதல் பண்பாடு

களிற்று யானையை
இசையால் அடக்கி
தினைப்புனம் காத்தவளின்
திமிர் கொண்ட
பண்பாடு

பிணமான மகன்
மார்பு கொண்ட
விழுப்புண்ணா?
போர்க்களம் சென்ற
வீரத்தாயின் பண்பாடு

பாறை ஓவிய
வரைவிலக்கணம் கூறும்
கொள்ளென
கொடுத்தலின்
வள்ளல் பண்பாடு

யாதும் ஊரே
யாவரும் கேளிர்
செவிப்பறை கிழிய
ஓங்கி ஒலித்த
ஒற்றுமை பண்பாடு

முன்னோர்
விதைத்த பண்பாடு
தலைமுறை தாண்ட
வேர்கள் இறுக்கும்
மண்ணாவோம்

புதுப்பாதை வேண்டாம்
செல்லும் பாதை
செப்பனிடுங்கள்
வரும் சந்ததிகள்
பயணம் கொள்ளட்டும்
உங்கள்
பேர் சொல்லட்டும்

கவிஞர் அன்னலெட்சுமி சரவணன்,ஈரோடு

# சங்கீத ராகம்

விடியலில் விளையாட்டாய் காக்காய்
கோழியின் இன்னிசையும் ராகம்தான்.
முத்துப்பல் தெரிய சிரிக்கும்
மழலையின் சிரிப்பும் சங்கீத ராகம்தான்.
ஜன்னலோடு உறவாடும்
காற்றும் கூட ராகம்தான்.
தெம்மாங்கு பாடும் விவசாயி
சொல்லும் சங்கீத ராகம்தான்.
கரையோடு விளையாடும்
கடல் அலையும் ராகம்தான்.
காலோடு உறவாடும் கொலுசு
மணியும் கூட சங்கீத ராகம்தான்.
புல்லோடு ஒட்டி இருக்கும் பூவின்
தலையாட்டல் கூட்ட ராகம்தான்.
விருப்பத்தோடு பேசும் காதலர்
சொல்லும் சங்கீத ராகம்தான்.
செல்லமாய் சிணுங்கும் ஊடல்
கூட ராகம்தான்.
விந்தையான உலகில் அத்தனையும்
ரசித்து வாழ்ந்தால் ருசிக்க வைக்கும்
சங்கீத ராகம்தான்.



கவிஞர் நிலமதி ராஜி,இலங்கை கல்முனை

# ஞாபகம் வருதே



கோலிக் குண்டில்
கொள்ளி சுத்தி வந்த
ரப்பர் கொண்டு
பந்து செய்ததும்

சோப்பு நுரையால்
பப்பாளி இலைத்தண்டு
கொண்டு குமிழிகள்
உருவாக்கி விட்டதும்

மழை காலத்திலே
தேங்கிக் கிடந்த
வடிகானிலே வாற்பேய்
பிடித்தது விளையாடியதும்

கண்ணாமூச்சி விளையாட்டால்
கறைபட்ட ஆடையால்
அம்மா அடித்த
செல்ல அடியும்
நான் கொண்ட
முதல் நட்பு
வந்த விதமும்
ஞாபகம் வருதே

கவிஞர் ஹஸன் முஹம்மது பஜீத், இலங்கை

# பெண் ஒரு மகாசக்தி

காலத்தையும் வெல்லக் கூடியவள் பெண்.
பெண்மையுடன் மென்மையும் கொண்டவள் பெண்.
எதையும் சாதிக்கப் பிறந்தவள் பெண்.
சத்தியமும் நேர்மையும் கொண்டவள் பெண்.
கருணையும், கலை நயமும் மிக்கவள் பெண்.
சாதுர்யமும், சமயோசித புத்தியும் கொண்டவள் பெண்.
எதையும் தாங்கும் சக்தி கொண்டவள் பெண்.
தனக்காக வாழாமல் தன்குடும்பத்திற்க்காக வாழ்பவள் பெண்.
சிக்கனத்தின் மறு உருவம் தான் பெண்.
சாதனைகளோடு சரித்திரம் படைக்க கடவுளால்,
படைக்கப்பட்ட கற்பக விருட்சம் தான் பெண்.
ஒரு துளி உதிரத்தில் குழந்தை தருபவள் பெண்.
ஒரே நேரத்தில் பல வேலைகளை செய்து முடிப்பவள் பெண்.
பொறுமையும், தன்னம்பிக்கையும் கொண்டவள் பெண்.
சகிப்பு தன்மையும், தியாக மனமும் கொண்டவள் பெண்.
நம் நாட்டில் ஓடும் பல ஆறுகளின் பெயரும் பெண்ணின் பெயரே!
சுதந்திர போராட்டத்திற்க்காக பல இன்னல்களை
தாக்கியவர்களும் பெண்களே!
நம் இந்திய நாட்டின் பாரத மாதாவாக
சித்தரிக்கபட்டிருப்பதும் பெண்ணே!
மகளிர் தினத்தில் மகளிரை போற்றுவோம்!
பெண் குழந்தைகளையும், பெண் சிசுவையும் காப்போம்!
வாழ்க வளமுடன்!



கவிஞர் கிருஷ்ணவேணி.ஆ,ஊத்தங்கரை

# பெண்ணே!

உன்னை நீயே செதுக்கிக் கொள்
உனக்கு நீயே வர்ணமிட்டுக் கொள்

பலி சொல்பவர்களெல்லாம்
வழி சொல்லப் போவதில்லையென தெரிந்திருந்தும்
வலி கொண்டு ஏன் அழுகிறாய்?

உன் கண்ணீர்
திறந்திருக்கும் வழிகளையும் மறைத்துவிடுமென
மறந்து விட்டாயா ?

பெண்ணே
வாய்ப்புக்களுக்காக காத்திருக்காதே
வாய்ப்புக்களை நீயே உருவாக்கு.



முடியுமென்றால் நம்ப மாட்டார்கள்
முடித்துக் காட்டு
முன்னுரிமை தருவார்கள்.

பாராட்டுக்களுக்காக காத்திருக்காதே
கஞ்சத்தனம் கொண்ட மனிதர்கள் வாழும் உலகமிது.

அடிகளைக் கண்டு
தடுமாறினாலும்
தடம் மாறிடாதே.

துணிந்து நில் ஆனால்
துவண்டிடாதே.
பெண்ணே!

கவிஞர் சனூபா தாஹிர்

# காதல்

அவளின் அழகிய
மதிமுகம் கண்டேன்
மதியிழந்து போனேன்.
ஆறாது தீராது
அவள் மேல் நான்
கொண்ட காதல்.
இதழ் வருடி
இன்பத் தேன் பருகி
கால நேரமில்லாமல்
காதலில் மூழ்கி
முத்தெடுத்தேன்.
புத்தம்புதுப் பூவாய்
உன்மேனி வாசம்
பித்தம் கொள்ள
வைக்குதடி!
புரட்டிப் பார்க்கும் ஆவல்
நூலாக இருக்கலாம் நூலிடையாகவும் இருக்கலாம்
எல்லாம் காதல் கொண்டு படிப்பவர் எண்ணத்தில்!



கவிஞர் லதா சுப்ரமணியன்,சென்னை-119

# நான்




அகர

கவிஞர் கீர்த்தனா பு,பாரதியார் பல்கலைக்கழகம்,பெருந்துறை

# மாதா

பத்து மாதங்கள்
கருவறையில் சுமப்பவள்

பகலிரவாய் கண்விழித்துப்
பராமரித்துக் காப்பவள்

எம்முறக்கம் (இ)ரசித்து
துன்பம் மறப்பவள்

இரத்தத்தைப் பாலாக்கி
நற்பண்புகளுடன் பருக்குபவள்

மனது துன்புறுகையில்
குளிர் போர்வையாகி
அரவணைப்பவள்

நாளையும் பொழுதையும்
நமக்கே அர்ப்பணிப்பவள்

தரணியில் நாமின்று
வாழ்வாங்கு வாழ

அவள் செய்யும்
தியாகங்கள் என்னென்பேன் அன்னையே

உரைத்திட வார்த்தைகள்
அகராதியிலும் இல்லையே

நோய் நொடி நீங்கி
வாழிய நீ பல்லாண்டு




கவிஞர் மாஹிரா ஹமீட் அஸ்ஹர்,கம்பளை(இலங்கை)

# ஆன்லைன் சூதாட்டம்

ஆட்டம் பாட்டம் கொண்டாட்டம்
சூது விளையாட போனால்
உன் வாழ்க்கை ஆகிடும் திண்டாட்டம்.

ஆன்லைன் ரம்மி
அதில் போடாத காசை நம்பி
பிறகு ஏமாந்து நடுத்தெருவில் நின்னுடுவ தம்பி

சூது விளையாடியதினால்
பஞ்சபாண்டவர்கள் போனார்கள் வனவாசம்.
உனக்கு வேண்டாம் தம்பி
ஆன்லைன் ரம்மி சகவாசம்

கடனாளி ஆகாதே
ஆன்லைன் ரம்மி நம்பி பணத்தை போடாதே

சொன்னா புரிஞ்சுக்கோ
இல்லனா நாலு பேரு கிட்ட கேட்டு தெரிஞ்சுக்கோ

கஷ்டப்பட்டு சம்பாதித்த பணம்
அதை நல்வழியில் செலவழிப்பது நமது நற்குணம்.



கவிஞர் விக்னேஷ்,வேலூர்

அகர முதல இலக்கிய பேரவை
அகழும் தமிழே! முதலும் தமிழே!!

# நினைவுப் புரவியில்



தொட்டுச்
சிலிர்த்துப்
படர்ந்து
பின் முழுவதுமாய்
நனைத்துப்
பல சாகசங்கள்
புரியும்
உன் நினைவு
மழைத்துளிகளுக்கு
புரவியின் வேகம்
அதன்
குளம்பொலிச்சத்தங்களில்
பட்டாம்பூச்சிகள்
படையெடுக்க
இதயமேடையில்
வானவில்லொன்று
சொரூபமெடுத்து
வழி கொடுக்கும்
மௌனந்தாளிட்டுக்
கொண்டாலும்
அந்தரங்க வீதிகளில்
அணையாத விளக்கேந்தி
கனாமொட்டுகளில்
பருவ காலங்களை
உயிர்ப்பிக்கிறாய்
மழைத்துளிகளின் மாயம்
இரவின் கருந்துகள்களிலும்
படிந்து
பகலின் சலனப்பகைகளையும்
தவிர்ந்து
காற்றின் தலையறுத்துத்
பிரபஞ்ச தேன்கூட்டின்
அறைகளெங்கும் முங்கியெழும்பி
முப்பொழுதிலும்
நனைந்தே திளைக்கிறேன்
இயல்பின் நிலை தாண்டித்
தொடரும்
நேசத்தின் நினைவுகள்
விட்டதா என்னை?
இல்லாமலே இருக்கும்
பிடிக்காமல் அடங்கும்
பிடித்தாலும் விடுத்துப்பறக்கும்
பட்டாம்பூச்சிகளாய்!
மிச்சமின்றி
நனைக்கும் மழைத்துளிகளாய்!

கவிஞர் மரு.ஜலீலா முஸம்மில்,ஏறாவூர்(இலங்கை)

# பெண்மை

இயற்கையில் பெண்மை கண்டேன்
இதழ் விரித்து சிரித்தாள்
பசுமை பட்டுடுத்திய பாரத தாய்.
பூக்களில் பெண்மை கண்டேன்
மொட்டு விரித்து பூவானாள்
பூப்படைந்த மங்கையாய்.
நாணலில் நளினம் கண்டேன்
நானும் பெண்தான் என்றது
நீரே! நீயும் பெண்ணா என்றேன்
வைரமுத்துவின் வரிகள் கேள் என்றது
நிலமே! நீயும் பெண்ணா என்றேன்
உம்மை சுமக்கும் தாயே நான்தான் என்றது
காற்றே! நீயும் பெண்ணா என்றேன்
மென்மையாய் வருடும் காதலி என்றது
காட்டுதீயே! நீயும் பெண்ணா என்றேன்
கோபத்தில் கொந்தளிக்கும் இராட்சசி என்றது
வானமே! நீயும் பெண்ணா என்றேன்
வருந்தும்போது வடியும் கண்ணீர் நான்தான் என்றது
ஐம்பூதங்களில் அடங்கிவிட்டாள் அவள்
ஆனாலும் ஆக்கவும் செய்வாள் அழிக்கவும் செய்வாள்
கண்ணியம் மாறா பெண்ணினம் கண்டு வியக்கவா
கற்பின் பெருமை கண்ணகி பெயரை உரைக்கவா
உடலை கொடுத்து உயிரை கொடுக்கும் மானிட பிறவியே
உம்மை கடவுளாய் கண்டேன் உன் உருவ திரையிலே.
பொட்டு வைக்கா கைம்பெண்ணே
குங்குமம் வைத்த தேவதையே
தொட்டிலாட்டும் தோரனையே
தோல் சுருங்கும் தோழமையே.
பரிணாமம் பல எடுத்து பார் உலகில் பரந்து கிடக்கிறாய்
பெண்மை என்னும் உண்மையோடு அனைத்திலும் கலந்து வாழ்கிறாய்.
தாய் நிலம் பெற்றெடுத்த தமிழ் மகளே
தமிழ் மகள் பிரசவித்த கைக்குழந்தையே
என் கவிதை!
உண்மையோ! பொய்மையோ!
கற்பனை காவியமோ!
கண்டுணர்ந்து கண்டறிக
என் கவிதையும் ஓர் பெண்தான் என்பதை.



கவிஞர் ஞா.மணிமாறன்,இரெட்டியூர்

# பெண்ணின் மறுபக்கம்

இராமனின் கதையினிலே இவளொரு பாத்திரம்!
எல்லோர்க்கும் இவள்மீது இருக்கிறது ஆத்திரம்!
தேர்விலகும் போதினிலே விரல்கொடுத்துக் காத்தவள்!
திசைமாறிப் போவாளோ தெரிந்தவர்கள் சொல்லுங்கள்!
ஊர்பழியைச் சுமந்திருந்தாள் உளத்திற்குச் சுமைகொடுத்தாள்!
வான்வேந்தான் கட்டளைக்கே நாளெல்லாம் செவிகொடுத்தாள்!
வரும்பழிக்கு அஞ்சாமல் மதிசற்றும் விலகாமல்
கருமமே கண்ணானாள் கடன்முடித்த பெண்ணானாள்!
இராவணன் ஏன்பிறந்தான் இராமனால் ஏன்மடிந்தான்
உள்ளிருக்கும் பெருங்கதையை உள்ளத்தில் புதைத்திருந்தாள்!
வாலிவதம் நடப்பதகு அவள்தானே காரணம்!
வானவனின் விதியொன்று அங்கேதான் பூரணம்!
சூர்ப்பனகையைச் சூரையாடும் சூழலினைத் தந்தவள்!
சுக்ரீவன் துணைசேரச் சொல்லாமல் சொன்னவள்!
அனுமனது ஆற்றலினை உலகறியச் செய்தவள்
அழியாத பழியேற்று அறம்காத்து நின்றவள்!
நாலுதிசை இராமநாமம் கீர்த்திபெறச் செய்தவள்
நன்மைசெய்து துன்பமேற்று நாநிலதைக் காத்தவள்!
சிற்றன்னை என்பதனால் சிறிதாக எண்ணாமல்
பெற்றவளைப் போல்எண்ணி பேர்புகழை பெற்றானே!
பதவியெனும் பெருநெருப்பில் வீழாமல் காத்தீர்கள்
பழரசத்தின் சுவையுணரச் செய்தீர்கள் என்றானே!
அந்தவழி ராமனுக்குப் புகழ்சேரக் காரணம்
அவள்தானே! ஆயினுமேன் அவளுக்கிலை தோரணம்?
பழிசொல்வோர்க் கெல்லாம்மறு மொழிபேச வில்லை!
பரதனையும் ராமனையும் பிரித்தெண்ண வில்லை!
ஊர்சொல்லும் பழியின்பத் தேரென்று கொண்டாள்!
ஒருகோடி சொர்க்கங்கள் அதிலென்று கண்டாள்!
விதிவலிது எனச்சொன்னாள் முடிந்தவரை தன்னால்!
வெந்தழலில் பொன்னொளிரும் என்பதிந்தப் பெண்ணாள்!





கவிஞர் முனைவர் கதிர்வேல் தனியரசு,திருச்சி

# நண்பன்

கண்ணீர் துடைக்க வரும் என
நினைத்த உறவெள்ளம் கண்களுக்கு
எட்டிய தூரம் வரை காணவில்லை
வாழ்வில் உதாசீனம் செய்த போதும்
உள்ளம் ஏதிர்பாராமல்
பழைய அன்பு மாறாமல்
வாழ்க்கைக்கு காவலனாக
கண்ணீரை துடைக்க
எனது புன்னகையாக
வந்து நின்றான்
எனது நண்பன்.



கவிஞர் மு.கணேஷ்,சேலம்

# வாழ்வின் ஒளி

பெண்ணென இழிக்கும் சமூகத்திலே
பொன்னாய் மிளிரும் பெண் இவள்

ஒதுக்கியது போதும்
ஒதுங்கியதும் போதுமென
உயர்ந்திட ஓடிடும்
உயர்வான பெண் இவள்




கட்டுப்பாடுகளிட்டு
கட்டுப்படுத்தினாலும்
விடாத முயற்சியோடு
வீழ்ந்தாலும் எழுந்திடும் பெண் இவள்

சொல்லிலடங்காத துன்பங்களையும்
சொல்லிலடங்கா சுமைகளையும்
சோர்ந்திடாது கடந்திடும்
துணிவான பெண்ணிவள்

கவிஞர் அறூபா அஹ்லா,கல்முனை இலங்கை

# பெண்மை

கருவாய் இருந்து கதறி அழுது
வெளிச்சம் கண்டு விரல் பிடித்து கடித்து
தாயை உணர்ந்தாள் பெண் சிசுவாக
தாயிடம் நேசமும் தந்தையிடம் பாசமும்
அளவு மாறாமல் அர்பணித்தாள் பெண் குழந்தையாக
பள்ளி கல்வி தினம் சென்று
உற்றார் உறவினர் குணம் கண்டு
அறிவை வளர்த்த ஆசானின் பாதம் தொட்டு
வணங்கி மகிழ்வாள் மாணவியாக
பூப்படைந்து சுய ஒழுக்கம் சுயமாய் கற்று
சுதந்திரமாய் வளர்ந்தாள் பெண்ணாக
தாயாய் மாறி தாய்க்கு பணிந்து உதவினாள் குமரியாக
தந்தைக்கு கட்டுப்பட்டு பாசத்திற்கு உட்பட்டு
வாசற்படி இறங்குவாள் மணப்பெண்ணாக
குங்குமமிட்ட மாங்கல்யம் மார்பில் சுமந்து
மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறாள் புதுப்பெண்ணாக
கருவாய் இருந்து கண்ணியமாய் பிறந்து
கன்னியாய் வளர்ந்து கருவை சுமப்பாள் கர்பிணியாக
குழந்தை பெற்ற குழந்தை என்ற எண்ணம் ஏற்படுகிறது
ஆண்டுகள் கழித்து
பெண் ஒரு மகத்தான பிறப்பு
அவளை பற்றி வர்ணிக்க முடியாத அளவு சிறப்பு
மகப்பேறு பெற்று மறுபிறவி வலி சுமந்து
மீண்டும் மகப்பேறுக்கு தயாராகும் பெண்ணை விட
இவ்வுலகில் தைரியசாலி வேறு யாரும் இல்லை



கவிஞர் இர மணிகண்டன்,வங்கனூர்

# வாழ்க்கை

நரம்பில்லா நாக்கு நர்த்தனம் ஆட
சொல்லம்புகளால் துளையுண்ட
உள்ளமது ஊமையாகிவிட
ஆறுதல் அளித்த உறவுகள்
அன்னியமாகிவிட, எதுவும்
நிரந்தரமில்லையென காலம்
கைவிரித்து.
விடுதலையளிக்காமல்
விளையாடுகிறது.



கவிஞர் சாந்தி,காங்கயம்

# ஆணவமில்லா அறிவு

எந்தக் கலையின் ஆழமும் கடலளவே!
அந்தக் கலை முழுதும்
அறிந்தவருண்டோ?
எத்தனை எத்தனை உலகிலுண்டு
அத்தனையும் அறிந்தவருண்டோ?
சுட்ட பழத்தினையும்
சுந்தரத் தமிழில் ஔவை அறிய
கற்றது கைமண்ணளவே
ஆன்றோராயினும் ஆணவம் மிக
ஆயிடுவர் அறிவிலிகள்
முடியுமெண்பது நம்பிக்கை
என்னால் மட்டுமே என்பது அகமதி
நூலிழையில் வீழ்ந்தோர் பலர்
ஆணமில்லா அறிவென்பது நிறைகுடம்
தாழ்ந்திருக்கும் முற்றிய கதிர்
வளைந்து கொடுக்கும் நாணல்
சத்தமின்றி சாதிப்போரே சான்றோர்.



கவிஞர் ஷீலாதேவி அருணாசலம்,நாகர்கோவில்

# அழகியும் துமாவும்

அன்புக் கரங்களால் கைகள் கோர்த்துக் கொண்டு
புன்னகை மொழிகளில் புதிய விடயங்கள் பேசி
மகிழ்வாய் சென்று கொண்டிருந்தனர்
படகில் பயணம் பற்பல பூரிப்புகள்
சின்னஞ்சிறு புகைப்பிடிப்புகளோடு
காதலராய் ஒரு நடைபாதையில்
பாதைகள் முடிந்தன
உள்ளத்தின் உரைகள் தொடங்கின வெட்கம்விட்டு
சிறு இடைவேளை இனிப்புகளாய், காரமமுமாய்
மீண்டும் தொடர்ந்து பயணித்தனர் அழகியும் துமாவும்
நல்ல உறவுகளாக.



கவிஞர் பெ.தனலட்சுமி,ஈரோடு மாவட்டம்

# ஹைக்கூ கவிதைகள்

தன் போக்கில் வளர்ந்து
படர்ந்து இருக்கிறது
மரத்தின் நிழல்

வாசலில்
எங்கோ உதிர்ந்த
காய்ந்த இலைகள்



ஒன்றுபோல் இல்லை
ஒரே மரத்தின்
இலைகள்

மரத்தை வெட்டியதும்
கோடாரி மீது விழுகிறது
சூர்ய ஒளி

வறண்ட ஆற்றில்
தேக்கம் கொள்கிறது
நெகிழி கழிவு

நகர்ந்தபடியே
தேங்கிய நீரில்
மீன் குஞ்சுகள்

கவிஞர் மீன் கொடி பாண்டிய ராஜ்,திருப்பூர்

# தன்முனைக் கவிச்சாரல்

## பெண் புத்தி பின் புத்தி இதன் உண்மை அர்த்தம்

பெண்கள் எப்போதுமே எந்த ஒரு விடயமாக இருந்தாலும் அதன் பின்விளைவுகளை ஆராய்ந்தே முடிவுகள் எடுப்பார்கள்.
கல்வியாகட்டும், காதல் ஆகட்டும், குடும்பம் ஆகட்டும், எங்கு எந்த பிரச்சனை வந்தாலும், அதற்கு தான் எடுக்கும் முடிவு எந்த அளவு விளைவுகளைத் தரும் என்பதை யோசித்து விட்டு அதற்கு தகுந்தது போன்ற முடிவைத் தான் அவள் புத்தி சொல்லும்.
பெண் புத்தி பின் வருவனவற்றை யோசித்து விட்டு சொல்லும் புத்தி என்பதைத் தான் "பெண் புத்தி பின் புத்தி" என்றார்கள்.
இதை நாம் எந்த லட்சணத்தில் புரிந்துக்கொண்டோம் என்பதை நான் சொல்லத் தேவையில்லை. உங்களுக்கே தெரியும்.இப்போது இந்த பழமொழியின் அர்த்தம் தெரிந்தவர்களும் அதிகம் இல்லை, இந்த பழமொழிப் படி இருக்கும் பெண்களும் அதிகம் இல்லை.




கவிஞர் ராஜூ ஆரோக்கியசாமி, திருச்சி

அகர முதல இலக்கிய பேரவை
அகமும் தமிழே! முகலும் தமிழே!!

# சூழ்நிலை வெளிச்சம்

சுடுதே சூழ்நிலை
சூரியனுக்கு எதிரா!
பல மனிதனின்
மரணங்களை நிர்ணயித்து.

தீர்க்க முடியாத சங்கடங்களை தினம் தினம் மனதில்
மனிதப் பிறவியில் மாண்டு போவதற்காக
இந்தச் சூழ்நிலை.
ஒவ்வொரு மனிதன்
வாழ்க்கை தனிப்பட்டது.
ஆறாத காயங்களும் வலிகளும் வேதனைகளும்.

வெற்றி தோல்வி நம்பிக்கை மீண்டும் எதிர்கொள்ளும் தருணம்.
நேரமும் காலமும் கடக்கிறது
இவன் தனிமையில்.
வலி அறிந்தும் வழி தெரியாமல் வாழ்க்கையில்
வெளிச்சம் வேடிக்கை பார்க்கும் அளவிற்கு ஒவ்வொரு
மனிதனின் வாழ்க்கையிலும் ஓர்
சூழ்நிலை தாக்கம்.



வாழ்க்கையில் மாற்றங்களை ஏற்படுத்தி
மனங்களை மாற்றி மரணத்தை தழுவிக் கொண்டிருக்கிறது.
அன்று சோதனைகள் பிறப்பிடமாகவும் வலிகள் சிறப்பிடமாகவும்.
ஆட்கொண்டு ஆள் மனதை ஒவ்வொருவரையும்
ஆட்டி வைக்கிறது அவர்களின் சூழ்நிலை.
சொல்ல முடியாத பின்னணியில் ஒவ்வொருவருக்கும்
ஒரு தொடர்கதை தொடர்கிறது அவர்களின் வாழ்நாளில்.

ஏனடா இந்த மனிதப் பிறவி என்ற மாற்றத்தில்
சூழ்நிலை வெளிச்சம் அறியாமல்
செவியும் மொழி இழந்தது
வலியும் உயிர் அறிந்தது.
குருதியின் ஊழ்வினை இந்த பிறவியின் பாவனை.
மாறுமா இந்த சூழ்நிலை
மாற்றம் பெருமா வேதனை
வாழ்க்கைக்கு ஒரு சாதனை.

சுடுதே சூழ்நிலை! தொடர்ந்து கொண்டே இருக்கும்! தொடரும்...

கவிஞர் ம.செல்லமுத்து,நுத்தப்பூர்

# சூரியனில் பூத்த காதல் மலர்

உதித்த சூரியனாய்
மேலோங்கி நீ இருக்க
சேராத பூமியிலே
சேற்றினிலே நான் மலர்ந்திருக்க
நீ இல்லாத விடியவில்லை
உன் ஒளி தீண்டாத
என் மேனி இல்லை.
இருப்பேனும் காத்திருப்பேன்
உன் காதலுக்காக பூத்திருப்பேன்.



கவிஞர் ஏ.தேவராஜ்,சென்னை

# காதல் செய்

இந்த உலகத்தின் மேலே இருக்கும் இன்னொரு உலகம் அது
ஆம் அடிக்கடி நாமெல்லாம் சென்று வந்து உலகமாக கூட இருக்கலாம்?

அந்த உலகில் கண்ணாடியை நானும் பார்க்க அதில் அவள் தெரிகிறாள்.
என் நிழல் கரைந்து அதில் அவள் மலர்கிறாள்
அங்கே பாலைவனமும் பசுமையாக இருக்கின்றன
சுடும் கட்டாந்தரையும் கதகதப்பு கொடுக்கின்றன
எல்லா பக்கமும் காதல் காற்று வீசுகிறது
அந்த உலகில் உள்ள கடல் அலைகளும் கூட
ஒன்றை விட்டு ஒன்று பிரிவதே இல்லை
ஒன்றாகவே வந்து விழுந்து மீண்டும் எழுந்து ஆர்ப்பரிக்கின்றன.
அந்த உலகில் பூக்கும் எந்த பூக்களும் வாடுவதே இல்லை
இங்கே எல்லோருமே அழகாக இருக்கின்றார்கள்
காரணம் எல்லோருமே அன்பாக இருக்கின்றார்கள்.



நிலவும் சூரியனும் ஒரே வட்டப்பாதையில் ஒன்றாக வட்டமிடுகிறது
காதலெனும் ஈர்ப்பு விசை அந்த பூமியை
அலுங்காமல் குலுங்காமல் அழகாக உருட்டுகிறது.
இங்கே ஈ எறும்பு பறவை விலங்குகளின் அத்தனையும் உண்டு
ஆனால் அவைகளும் காதல் செய்வதால்
அவைகளை யாரும் இங்கே காயப்படுத்துவது இல்லை.
அவையும் யாரையும் காயப்படுத்துவது இல்லை

இங்கே பெரும் மலைகளும் பெருங்கடல்களும் இருக்கின்றன
அவைகள் எல்லாம் காதலுக்கு அரணாக இருக்கின்ற
இந்த உலகம் வந்து பார்
இந்த இடத்தில் வரும் கண்ணீரும் ஆனந்த கண்ணீராகத்தான் இருக்கும்
கதறல் கண்ணீராக இருக்காது
கண்டவர்கள் எல்லாம் வந்துவிட முடியாது இங்கே
காதலிப்பவர்கள் மட்டும் தான் வர முடியும்.

முக்கிய குறிப்பு
காதல் என்ற பெயரிலே காதல் என்றால் என்ன என்று கூட தெரியாமல்
காதலிப்பவர்களுக்கு அல்ல இந்த உலகம்.
காதலை உணர்ந்து காதல் செய்யும் காதலர்களுக்கு தான் இந்த உலகம்
ஆம் நீங்களும் வர வேண்டுமா இங்கு

கண்களை மூடி காதலை உணருங்கள் போதும்.
அந்த காதலே உங்களை அழைத்துக் கொள்ளும்.

காதலை காதல் செய் ; காதலை காதலாய் செய்.

கவிஞர் ஆரூர்.சிவ.மணிவேல்

# மடல் பூக்கள்

ஓர் கடிதம் எழுதினேன்
நீலக்கனவின் நினைவில்
நெஞ்சிலாடும் மொழியை
விரல்கள் கோர்க்கிறது

ஓசையின்றி ஓர் வரைவு
மடல் வரைய மனம் பேசுவது
விரலுக்கு விரையுது

சட்டென வார்த்தைகள்
அரும்பாகி மலரும் விந்தை
பட்டென பூக்கும் பரவசம்
நிறைந்து நிரம்பும்

எழுதும் வார்த்தைகள் மின்னும்
எழுதிய பின் ரசிக்கும் மனம்
விசமப்புன்னகையில்
விழிவேர்க்கும்



எழுதிய கடிதத்தை மீண்டும்
வாசிக்க
அக்காலப் பாதையில் நடையேறும்
மனம்
பொற்காலத்தின் சுவடுகளாய்
அழியாது பேசும்
முற்றுப்புள்ளியில் முடிவடையாது
தொடரும்.

கவிஞர் சுந்தரி பாஸ்கரன்,திருப்பூண்டி

# கண்ணாடி சிறகு

ஐயப்பாடு நீக்கி
அவள் பாடலில்
மயங்குகிறது
அவள்வீட்டு தென்றல்

தென்றல் தீண்டும் வேளை
மண் பார்த்து நிற்கிறாள்
மங்கை

மண்ணும் மயங்கி
நிற்கிறது அவளழகில்



தன் மண்ணின்
வண்ணம் கலந்தவள்
தன்வீட்டு கண்ணாடியை
அலங்கரிக்கிறாள்
அவள் நெற்றி
ஸ்டிக்கர் பொட்டிட்டு.

தந்தையோடு
விட்டுவந்த சிறகை
ஆடிக்குள் அணிந்து
ஆகாயத்தில் பறக்கிறாள்!

கவிஞர் ஜெயப்பிரபா,சென்னை 81

# சின்னஞ் சிறியவை

இயற்கையோடு
இணைந்த
நம் வாழ்வில்

சின்ன சின்ன
ஆசைகளை
நிறைவேற்றி

இருக்கும்
தருணங்களை
இன்பமுற
வாழலாம்.



கவிஞர் ரதி ஜெயராஜ்,வல்லம்

# முள்வேலிக்குள் முடங்கியே

விழிகளில் தேக்கிய கனவுகள் கலைந்து
விழிநீராய் வழிந்தே நனவிலே கரைந்து

கிளியொத்த மங்கை கிலியுடனே பதுங்கி
கிழிந்திட்ட மனதுடன் பதைக்கின்றாள் வெதும்பி

அழுதழுது கண்களும் முக்கோண மூக்கும்
பழுதாகி சிவந்தே முகவழகு நீக்கும்

விதியதை நொந்தே உதடுகள் விலக்கி
விரல்நகம் கடித்தே விழிக்கின்றாள் கலங்கி



மதியொத்த அழகி கதியற்ற நிலையிலே
விதி வெல்ல மதியின்றி வலையிலே

சிக்கித் தவிக்கின்றாள் சிந்தை நொந்தே
உக்கி உறைகின்றாள் கந்தை நெஞ்சே

பார்க்கின்றாள் ஏதோ விழிகளில் தென்பட
பாரினில் மாதோ வழியினைக் கண்டிட

தோன்றட்டும் புதிய ஒளி ஒன்று
சான்றாகட்டும் புதிர்நீக்கும் வழி நன்று

கவிஞர் பஸ்லா பர்ஸான்,காத்தான்குடி(இலங்கை)

# பெண்மையில் பாரதி

நீ சொன்ன கருத்துக்கள்
இங்கே கானல் நீர்
பெண் படிக்கிறாள் உயர்கிறாள்
ஆனால் சுதந்திர உரிமை கானல்
ஆணை விட பெண் உயர்ந்தாலும்
இங்கே அவள் விருப்பம் கானல்
பெண் ஒரு தீ என்றாலும்
குடும்பத்தில் ஒரு அவள் நீர்
எங்கே உயர்ந்தாலும் எந்த
உயர்பதவி அடைந்தாலும் அவள்
உறவு ஒரு கட்டத்தில்
அடைப்பட தான் வைக்கிறது
பெண் வளர்ச்சி அடைகிறாள்
பெண் ஒருபக்கம் வீழ்ச்சி
பெண் முயற்சி அதிகம்
ஆனால் வீழ்ச்சியும் அதிகம்



கவிஞர் சி.சிவப்பிரியா,பொன்செய்

# உயிர் அணையுமுன்

உன் ரோஜா இதழ்களை
நெருப்பு ஊசிகளால்
தையல் போடுகிறாய்
இளமை மேனியை
அவமானச் சின்னங்களால்
அழிக்கப் பார்க்கிறாய்
தற்கொலைப் பயணத்தை
தவணை முறையில்
தரிசிக்க நினைக்கிறாய்
இதயத்தை இதமாக்குவதாய்
எரிமலையை உள்ளே
இருத்தி வைக்கிறாய்
பொறுமைத் தவம் வேண்டி
பொசுக்கும் பூகம்பத்தை
விலைக்கு வாங்குகிறாய்
நெருப்பை விழுங்கி
நெஞ்சத்தை எரிக்கிறாய்
இருப்பின் மகத்துவத்தை
இறப்பில் புதைக்கிறாய்
உயிர் அணையும்முன்
உன் புகையை அணை
புகையைப் புதை
இல்லையேல்
பூமியில் புதை.



கவிஞர் இளையவன் சிவா,மடத்துக்குளம்

# மழலை பொழுதுகள்

இரு இதழும்
ஓர் புள்ளியில்
நகரத்தான்.
நகரத்தார்
பார்வைகண்டு
நகன்றது

மழலை பொழுதுகள்
தந்தாள் என்னவள்



மார்கனத்து
தவமிருக்க.
மழலையாகி
பசியெடுக்க.
ஊட்டா பொழுதும்
உயிரை வருகிறது

எப்பொழுதும்
என்னவளே
எனக்கு ஊறும்
அமிர்தம் !

கவிஞர் ஆர்.மோகன்ராஜ்,சென்னை- 87

அகர முதல இலக்கிய பேரவை
அகமும் தமிழே! முதலும் தமிழே!!

# பனைமரம்

எந்தமிழ்நாட்டிற்குரிய மரமாம்
எம்மக்கள் துயர் நீக்கும் மரம்
உந்தன் சிறகுகளான ஓலைகளே
முன்னொரு காலத்தில் எம்முன்னோர்களின் வீடு
தற்போதும் தொடர்கிறது தோப்புகளில் வீடுகளாய்
இயற்கைப் பூங்காக்களில் இளைப்பாறும் இன்னிசை இடமாய்
அங்கும் அவ்வோலையைத் தாங்கி பிடிப்பது
உந்தன் உடலான மரக்கட்டைகளே
தித்திக்கும் வெல்லப்பாகின் சுவையும் குளிர்ந்தப் பதநீரும்
மருத்துவ குணமிக்க கள்ளும் கருப்பட்டியும்
மழலை மனம்கவரும் நுங்கும் கிழங்குகளும்
கைவினைப் பொருட்களும்
மண்ணிற்கு மழையையும் கொடுக்கும் மரம்
உன்னால் உயரும் பொருளாதாரம்
தமிழ்நாட்டிற்கும் நாட்டு மக்களுக்கும்
வஞ்சனுக்கும் பஞ்சமில்லா நன்மை செய்யும்
ஓங்கி உயர்ந்து நிற்கும் பெருமிதமான நம் பனைமரம்



கவிஞர் ஹரிணி நாகராஜன்,இராமேஸ்வரம்

# தொட்டுவிடும் தூரம்

உள்ளமும் விரலும்
எழுத துடிக்கிறேன்
பல நாட்களாக
நேரமின்மையால் மறந்துவிடுகிறேன்
வாய்ப்புகளும் கிடைத்தும்
தொடரவும் முடியவில்லை
அருகில் இருந்தும்
அகரமுதல பேரவையில்
பயணிக்கவில்லை பல நேரங்களில்
வருத்தங்கள் உள்ளன
என் விழிகளில்
மீண்டும் தொடருவேன்
உன்னோடு என்றும்



கவிஞர் பேரா.முனைவர்.அக.வீரவன்சாரா,சிதம்பரம்

# ஞாலத்தில் ஞாயிறு மறையாத இடங்கள்

பகலிரவும் நாள்முழுதும் சூரியன்தான் மறையாத
சிலயிடங்கள் பாரகத்தே உளதென்பர்! அத்தகைத்தாம்
பகுதிகளோ நீளநிலத்தே பத்துளதாம்! ஐரோப்பிய
நார்வேயின் ஹேமர்பெஸ்ட் நகரினிலே நள்ளிரவு
பனிரெண்டு மணியின்பின் நாற்பத்து மூன்றான
நிமிடத்தில் மறைந்தவது நால்பத்து நிமிடப்பின்
தோன்றிடுமாம்! மேமுதலாய் ஜூலைவரை ஏழ்பத்து
ஆறுநாட்கள் சூரியனே மறைவதுவே இல்லென்பர்!
யுனெஸ்கோ பாரம்பரி யவிடமாகத் தேர்ந்துளதே!
ஐஸ்லாந்து கொசுவில்லா நாடாகும்! கோடையிலும்
இரவெல்லாம் தெளிவாகும்! ஜூன்மாதம் மறைவதில்லை!
ஆர்க்டிக்கின் கிரிம்சேவும் அகுரேரி நள்ளிரவிலும்
பார்க்கலாமாம் சூரியனை! வடக்கமைந்த பகுதியாம்
ஸ்வீடனிலே கரினாபேர் நகருளது! மேமுதல்
ஆகஸ்டு வரையுள்ள நூறுநாட்கள் மறைவதில்லை!
ஆர்க்டிக்கின் கனடாசார் நுநாவுட்டில் குளிர்கால
முப்பதுநாள் காரிருளே! கோடையிரு மாதமுழுதும்
சூரியன்தான் மறைவதில்லை! ரஷ்யத்து செயின்ட்
பீட்டர்ஸ் பர்க்தன்னில் கோடைதனில் மூன்றுவாரம்
நாள்முழுதும் சூரியவொளி நின்றொளிரும்! ஜூன்நடுமுதல்
ஜூலையின் துவக்கம்வரை வெள்ளைஇரா என்பாரே!
நார்வேயின் ஸ்வால்பார்ட்டோ ஏப்ரல்நடு ஜூலைதன்
நடுவரைக்கும் நான்குமாதம் மறைவதில்லை! கனடாவின்
யூகோனும் கோடையில் ஐம்பதுநாள் மறையாது!
சூரியனின் நிலமென்பாரே! ஐரோப்பிய பின்லாந்து
கோடையில் ஏழ்பத்து மூன்றுநாட்கள் மறையாது!
ஐரோப்பிய கிரீன்லாந்து வடக்கமைந்த கானாக்கில்
நள்ளிரவு வரையளவும் சேரிரண்டும் அரைமாதம்
ஒளிர்ந்திடுமாம்! அலாஸ்காவின் பாரோவை உட்கியாகவிக்
என்பாரே! மேயிறுதி ஜூலைவரை மறையாதே! பத்திவையே!

**கவிஞர் கணக்காயன் (இ.சே.இராமன்)**

# கண்ணப்ப நாயனார்

தேடினான், காளத்தி மலையில் சிவனைக் கண்டான், கட்டித் தழுவினான்
ஓடினான், அடுத்து என்ன செய்வது என்பது தெரியாமல் தத்தளித்தான்
ஆடினான், குடுமித் தேவரைக் கண்ட மகிழ்ச்சியில், துள்ளிக் குதித்தான்
பாடினான்,"ஆ, ஊ", ஆனந்தமாக கத்தினான், மலையில் எதிரொலித்தது .

சிவன்மேனி ஈரமாக, தலையில் இலைகளுடன் பூக்களைக் கண்டான்.
"எவர் செய்த வேலை இது ?" "பார்ப்பனரின் பூசை இது" என்றான் காடன்
"அவர்போல் நானும் இங்கேயே இருந்து தினம் பூசை செய்கிறேன் பார்"
இவன், நீர் கொண்டுவர நண்பரகளுடன் நதிக்கரை சென்றான்.

பூக்களும் தழைகளும் சேகரித்து குடுமியில் சொருகிக் கொண்டான்.
சொக்கலிங்கத்தை நீராட்ட ஆற்று நீரை வாயில் அ டக்கிக் கொண்டான்
பக்காவாக வேகவைத்த பன்றி இறைச்சியை ருசிபார்த்துக் கொண்டான்
திக்கற்ற காட்டில் பசியோடு இருப்பார், ஓட்டமாக மலை மேல் ஏறினான்

கையில் வில், அம்பு, மறு கையில் இறைச்சி, வாயில் நீர், குடுமியில் பூக்கள்
நைவேத்தியம் எப்படி செயவது ? திண்ணன் இதுவரை கண்டறியாதது .
வைத்திருந்த பூக்களை தன் கால் செருப்பை தலைமீது வைத்து தள்ளினான்,
தைத்த இலையில் தின்று ருசி பார்த்து சுட்ட பன்றி இறைச்சியை பரப்பினான்

சிவனுக்கு அபிடேகம் செய்ய வேண்டும் ,வாயில் இருந்த நீரை துப்பினான்
அவன் குடுமியிலிருந்த மலர்களை கங்கை நாதன் தலையில் சூட்டினான்
கவனித்து தீயில் வதக்கி கூடவே தேனும் கலந்த திருவமுதை படைத்தான்
அவனறிந்த அளவில் அப்படியே எப்படி விட்டுச் செல்வது நடுங்கினான்.

தனித்து இருக்கும் நாதன் பக்கத்திலேயே காவல் நின்றான் திண்ணன்
பனிவிலகும் காலையில் சிவனுக்கு புசிக்க வேட்டைக்குப் புறப்பட்டான்
கனிகளுடன் தினம் நியதிப்படி வழிபடும் சிவாச்சாரியார் வந்தார்
இனி உயிர்வாழ்ந்து பயனென் கொல் ? வருந்தினார் அக்காட்சி கண்டு

சுடவைத்த இறைச்சியும், எலும்புகளும் பார்த்தார், ஆகமம் கெட்டது
படபடக்கும் மனதுடன், "நெஞ்சு பொறுக்குதில்லையே, இது தர்மமா?
அடக்குவார் இல்லாத அநீதி, உனக்கு அல்லவா?" அழுது புலம்பினார்
தடதடக்கும் வண்டிபோல் தட்டுத் தடுமாறி மயங்கி கீழே விழுந்தார்




மயங்கி எழுந்தவர் அங்கு நடந்திருக்கும் அலங்கோலதத்தைக் கண்டார்
கலங்கினார ஆகமவிதிப்படி நடந்த பூஜை இப்படி நாசமானது எதனால் ?
தயங்கியபடி சிந்திக்கிடக்கும் மாமிச துண்டங்களை சுத்தம் செய்தார்.
"இங்கிதம் தெரியாமல் இக்காரியங்களை யார் செய்கின்றார் ஈசனே ?"

வீடு வந்த சிவாச்சாரியார் நாதனுக்கு நடந்ததையே எண்ணினார்
படுத்தாலும் தூக்கம் இல்லாமல் "அபச்சாரம்"; என்று புலம்பினார்
"தடுத்து நிறுத்த முடியாத பாவி நான்" நினைத்தவாறு உறங்கினார்
அடுத்து அவர் தூக்கத்தில் இறைவன் கனவில் தோன்றி கூறலானார்

"அன்பனே பதட்டம் வேண்டாம் அன்பு வெளிப்பாட்டில் இதுவும் ஒன்று
துன்பப்படாமல் நாளை மறைந்திருந்து நடப்பதைக் கவனிப்பாயாக!."
முன்பு எப்போதும் கண்டிராத காட்சி ஒன்றினை நீ காண நேரலாம் . "
தன் முன் காட்சி தந்த கங்கை அணிந்த ஆடலரசன் கூறி மறைந்தார்.

(தொடரும்)

கவிஞர் ந.திருக்காமு

# மரண வலி

சுவாசிக்க காற்று
இருந்தும் கூட
சுவாசத்துக்கு
தட்டுப்பாடு நிலவுகிறது.

மறுதலித்து
மறுதலித்து
கோர்த்திருந்தன
கைவிரல்கள்.

திடீரென்று
குரல்வளை நெரித்து
குழியில் தள்ளி
மண்மூடும் மரண வலி.

நூலருந்த பட்டம்
மேகச்சிறையில்
அந்தரத்தில் அசைகிறது



நிராகரிப்பின் வலிக்கு
நிவாரணம்
எதுவுமில்லை
சோகம் மலையேறும்.
சோர்வுகள் நீங்கும்.

காயங்களும்
தழும்புகளும்
காலம் கனிந்தால்
நாளையது நிச்சயம் காயும்.

கவிஞர் ஆய்ஷ்

# அன்பென்ற வானிலே

அன்பென்ற வானிலே
கோபமாக சூரியன்
அமைதியாக சந்திரன்
மிரட்டலாக மின்னல்
இழுத்தடிக்கும் இடி
மனக்குமுறலாக மழை
மகிழ்ச்சியாக மண்
கரிக்கும் கடல்நீர்
கண்ணைப் பறிக்கும் இயற்கை அழகு



மண்ணாலும் மாற்றுக்கட்சியாளரும்
மரணித்து விட்டால் மனமகிழும்
மறுதேர்தலில்!

மந்திரத்தால் மகிழ்ச்சி வாரா!
மனமதிலே நம்பிக்கை வரும்
நம்பிக்கையால் நல்லது நடக்கும் நடப்பதாலே
மகிழ்ச்சி வருமே

இன்பமும் துன்பமும் இரட்டை குழந்தைகள்
எது முதலில் வந்தாலும் அடுத்ததும் வந்துவிடுமே!

மந்திரமில்லை மாயமில்லை
இல்லை இல்லை இன்ப"மதுவும்"
மனித குடியை கெடுக்கும் குடியில் இல்லை!

மஞ்சமதில் தஞ்சமடைந்து
கொஞ்சநேரம் கொஞ்சியதால்
கொஞ்சி விளையாட மணமக்களுக்கும்
மகவு ஒன்றும் வந்து கொண்டாட்டமான
வாழ்க்கையை குதூகலமாக மாற்றிடுமே!

மலையளவு பணம் வேண்டா!
மழலை மனம் போதுமே!

கவிஞர் நீலா சுபாஷ், ஆக்கூர்

# கட்டபொம்ம ரெனும்பெயரில் காளமேகப் புலவர்

## பன்னிருசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

கட்டபொம்ம(ர்) ரெனும்பெயரில் காளமேகப் புலவரவர்
கண்ணிமைக்கும் நொடிப்பொழுதில் கவியாத்துப் போவரென
களத்திலுள்ள கள்ளர்களும் அறிவார்கள் தானே.
பட்டறிவே இல்லாத பட்டாளம் மத்தியிலே
பட்டயத்தை மாட்டாது பண்ணெழுதிக் குவிக்குமிவர்
பரிசுகளைச் சேர்த்திடவா பல்லிளித்துப் போவார்.
புட்டுப்புட்டு வைக்குமவர் புலமைக்கு வேட்டுவைக்க
புவியிலின்னும் பிறக்கவில்லை புலவரென அறிவாரே
புறவாசல் நாடிவரும் புற்றீசல் புலவர்.
தொட்டுவிட யெண்ணுபவர் தோலுரிந்து போகுமெனத்
தொலைதூரச் சேதியொன்று செவிவழியே வந்ததனால்
தட்டுத்தடு மாறித்தான் தடம்மறந்து போனார்.

சுட்டுவதைச் சூட்டோடு கொட்டுவதில் வல்லாரின்
சொற்களுக்கோ இணையாகச் சொல்லெடுக்கத் தெரியாது
சூடுபட்டப் பூனையெனச் சுவரேறிப் போனார்
கொட்டமதை அடக்கத்தான் கோடிட்டு போனவரே
குட்டுப்பட்ட கூட்டமது குடைபிடிக்கப் போவதெங்கு
கொஞ்சமேனும் விடுவீரா பாவமவர் பாடே.
துட்டுக்குப் பாட்டெழுத துணைதேடிப் போனோரின்
துக்கமதை அறிவீரா இல்லையில்லை இன்னமுமே
துரத்தித்தான் அடிப்பீரா கவிவரியால் தொடர்ந்தே.
நட்டமில்லை தங்களுக்கு நாவுரைக்கும் சொல்லாலே
நடுநடுங்கிப் போகுமெங்கள் நிலைமைதனைப் பார்த்தேதான்
நல்லாசான் வாய்மொழிவாழ்த் தொன்றையுரைப் பீரோ.



கவிஞர் கவிதா சீனிவாசன்

# மழையே!

துளித்துளியாய் நீர் துளிகளை கொட்டும் மழையே!
சாரல் காற்றாய் என் மனதை வருடி சென்றதும் நீயே!
என்னைக் கவர்ந்த இயற்கை அன்னையின்  மகவு நீயே!
தளிர்களை  துளிர் விட உதவும் உத்தமனும் நீயே!
சொட்டு சொட்டாய் பொழிந்து பூமித்தாயை குளிரூட்டும் புதிரும் நீயே!
அவள் சோர்ந்து விடாமல் காப்பதும் நீயே!
நீ வடிக்கும் கண்ணீர் துளிகளா? மழைத்துளிகள்.
ஏனெனில், உன் சோகத் துளிகளைக் கண்டு
பூமித்தாய் இருள் ஆடையை அணிந்து கொள்கிறதே!
இறைவன் பரிசாய் தரும் அருட்கொடை நீயே!
ஆறு,குளம்,  ஓடைகளின் வயிற்றுப் பசியை போக்குவதும் நீயே!
மழையே! நீ கிடைப்பது மகிமையே!
உன் மகிமை கூடினால் கூட எமக்கு கொடுமையே!
உன் துளிகளிலே ஒரு துளியாய் நான் இருக்க ஆசை பிறக்கிறதே!
அதே துளிகளில் என் தலையை நனைக்க அவா வருகிறதே!
மழையே! உன்னை நான் ஆராதிக்கிறேனே!
அதனால், உன் பெருமை சொல்லி  மடலும் எழுதி விட்டேனே!



கவிஞர் ஹம்னா அக்பர்,இலங்கை

# எங்கிருந்தோ வந்தானோ? ஏன் பிரிந்துசென்றானோ?

எங்கிருந்தோ வந்தானோ? ஏன் பிரிந்துசென்றானோ?

அடைமழை ஐப்பசியில் வீட்டின் பின்புறத்தில்
அடைக்கலமாய் வந்த பூனை ஈன்றெடுத்தது
குட்டிகள் நான்கினை! பெண்ணொன்று! ஆண்மூன்று!
இடம்பெயர்ந்து வாசலின் முன்பக்கம் வந்தனவே!
பால், தயிர் பிஸ்கோத்தை உண்டு வளர்ந்தனவே!
கடைக்குட்டி ‘சைரனவன்”! அனைவரின் பசிதீர்க்க
அவன்தான் குரல்கொடுப்பான்! அதிகாலை வாயிற்கதவோரம்
அவன்குரலே ஒலிக்கும்! கண்திறவா நிலைமுதலாய்
கண்டோம் வளர்ச்சியினை! எங்களுக்கும் பெருமகிழ்வு!
இருமாதங்களில் பெண்குட்டி மறைந்தது விபத்தாலே!
பிறமூன்றும் வாடினவே பிரிவுத் துயராலே!
கடைக்குட்டி சைரனவன் பார்வையாலும், குரலாலும்
அடுத்தவர் பசிதீர்க்க அழைக்கின்ற குணத்தாலும்
எனைக் கவர்ந்தான்! மனதிற்கு மகிழ்வளித்தான்!
குழந்தைத்தனம் எனும்புள்ளி இணைத்தது இருவரையும்!
மாடிக்குச் செல்கையில் ஓடியுடன்வருவான்!
என் குரலைச் செவிமடுத்து எங்கிருந்தலும்
என்னருகில் வந்து நிற்பான்! நெகிழிப் பைகளை
வீட்டினுள் பிரித்தாலே மீ மீமீயென குரல்கொடுப்பான்!
நிலைக் கதவின் அருகினிலே நெடுநேரம் வீற்றிருப்பான்!
வெயில் நேரத்தில் நுழைவாயில் அருகே
துயில் கொள்வான்! வெளியில் நான்சென்றால்
தலைநீட்டி வீதியிலே எனைப் பார்ப்பான்!
வீதியெங்கும் நாய்கள்! பயப்படுவோம் நாங்கள்!
உள்ளே போவெனவே விரட்டுவேன் பொய்யாக!
தாய்ப்பூனை கொண்டுவரும் இரையினைத் தொடாமல்
சைவப்பூனையாக சைரனவன் வளர்ந்தானே!
ஒன்பதாம் தேதியன்று ஒலிக்கவில்லை சைரன்குரல்!
தெருநாய்கள் குதறியதால் அதிகாலை வேளையிலே
இறந்த பூனையினை அகற்றி விட்டதாய்
அறிந்தவுடன் துடித்தோம்! வெறுமையை உணர்ந்தோம்!
வானவில் போல தோன்றியவன் மறைந்தானே!
ஏனிந்தக் கொடுமை அவனுக்கு இறைவா?
அவனின் ஆன்மா அடையட்டும் நின்திருவடியை!
நினைவில் அவன்முகமும் செவிகளில் அவன்குரலும்
என்னுள் எந்நாளும் நிலைத்திருக்கும்! ஒலித்திருக்கும்!



கவிஞர் ஈ.சீ.சேஷாத்ரி,புதுச்சேரி

# பெண் எனும் மானுடசக்தி

எண்ணத்தில் சிற்பமாய்
எழுதிய வடிவமைப்பு
வண்ணத்தில் வார்த்த
வழிகளின் அன்பமைப்பு

குவளயத்தில் குன்றாத
குறையில்லா சீரமைப்பு
பவளமாய் மின்னிடும்
பாசத்தின் பண்பமைப்பு

கருவறை சுமந்து
கண்ணாய்க் காத்து
அருகில் இருந்து
அனைத்தும் செய்வாளே



எல்லா வடிவிலும்
எத்தனை உறவுகளாய்
அள்ளமுடியா அன்பினை
அள்ளித்தரும் வடிவமே

தொட்டில் தொடக்கம்
தொடர்ந்து வரும்
ஏட்டாத தொலைவிலும்
ஏங்கிடும் உணர்வே

பந்தமாய் அரவணைத்து
பலதுன்பம் பொருத்திருந்து
வந்திடும் வினைகளை
வழியோடு அகற்றிடுவாளே

பெண் எனும் மானுட
பெருமையான சக்தியே
மண்ணோடு மறையும்வரை
மகிமை தருவாளே

அவளின்றி அணுவும்
அசையாது அகிலத்தில்
தவமில்லா கிடைத்த
தரணியின் தெய்வமே

கவிஞர் கிருஷ் அபி,இலங்கை

# மனமும் குணமும்

மனமும் குணமும் மாயங்கள் செய்யும்
வனப்புகள் சேர்த்து வாழ்வினை நெய்யும்
இடரிலும் கூட எழிலினைக் காணும்
அடக்கம் தன்னை அணியாய் கொள்ளும்

மகிழ்வின் பிறப்பிடம் மனமது தானே
சுகித்திட இன்பம் சூழலைச் சாரும்
அகமதில் நேர்மறை ஆட்கொண் டிருந்தால்
சகலமும் இங்கே சாதகம் தானே

வலியிலும் வழிகளை வகுத்திடும் மனமே
நலமாய் மாறும் நயமுடன் குணமே
விலங்காய் இன்றி விளக்கென இருந்தால்
இலக்கை நோக்கி ஏறலாம் நன்றாய்



தாய்மை குணமே தாங்கும் என்றும்
வாய்மை சொல்லும் வளமாய் மனமும்
ஆய்ந்தே அறியும் ஆற்றலும் கூடும்
சாய்ந்திடா நிலையை சாரமாய் கொள்ளும்

மனத்தினை ஆள மலருமே இன்பம்
மனமே இங்கு மாந்தரின் செல்வம்
புனையும் எண்ணம் புயலையும் கொடுக்கும்
வினைகளாய் மாறி வீரியம் காட்டும்

என்றுமே மனத்தை எழிலாய் செலுத்து
துன்பமும் அங்கே தூரமாய் ஒதுங்கும்
உன்னிடம் குணமும் உயர்வாய் இருந்தால்
மின்னுமே வாழ்வும் மீட்சியின் வடிவாய்

கவிஞர் பூர்ணிமா சங்கர்,கோயமுத்தூர்

# பாவலரேறு பெருஞ்சித்திரனார்

(கட்டுரை)

## சிறப்பு

**அன்னை மொழியே! அழகார்ந்த !**
**கன்னிக் குமரிக் கடல்கொண்ட நாசெந்தமிழே!**
**முன்னைக்கும் முன்னை முகிழ்த்த நறுங்கனியேட்டிடையில்**
**மன்னி அரசிருந்த மண்ணுலகப் பேரரசே!**

-பாவலரேறு



பாவலரேறு பெருஞ்சித்திரனார்

'தமிழ்த் தேசியத்தந்தை' என்று போற்றப்படும் பாவலரேறு பெருஞ்சித்திரனார் 20ஆம் நூற்றாண்டில் குறிப்பிடத்தக்கவர். கவிஞர், இதழாளர், இயக்கத் தலைவர், தமிழின உணர்வாளர், தமிழ் மக்களின் தொண்டர், தாய்மொழிப் பற்றாளர் எனப் பன்முகத் தன்மை கொண்டவராகத் திகழ்கின்றார்.

தம் நெறியிலிருந்து எக்காரணத்திற்கும் மாறாத நெஞ்சுரம் கொண்ட வராகவும் களப்போராளியாகவும் வாழ்ந்தவர். தமிழ் மக்களின் நலனிற்காக வெகுசிரத்தையுடன் செயல்பட்டுள்ளார்.

"பாவலரேறு" என்று தேவநேயப் பாவாணரால் அழைக்கப்பட்டவர். இத்தகையச் சிறப்பிற்குரிய பெருஞ்சித்திரனார் தமிழக வரலாற்றில் போற்றத்தகுந்த ஆளுமையாகத் திகழ்கிறார்.

# பாவலரேறு பெருஞ்சித்திரனார்

## (கட்டுரை)

**சிறப்பு**

பாவலரேறு பெருஞ்சித்திரனார்(மார்ச் 10, 1933 — சூன் 11, 1995) இருபதாம் நூற்றாண்டின் தமிழ்ப் பல்துறை அறிஞர்களில் முதன்மையான ஒருவர். தனித்தமிழ்த் தந்தை மறைமலையடிகளார், மொழிஞாயிறு பாவாணர் ஆகியோரின் கொள்கை கற்றவர்களிடமும், மற்றவர்களிடமும் பரவப் பெருங்காரணமாக விளங்கியவர். தமிழீழத் தேசியத்தலைவர் பிரபாகரன்தமிழகத்தில் முதன்முறையாக வந்த காலத்தில் அவரையும் அவரது தோழர்களையும் அரணாகக் காத்து அவர்களை வளர்தெடுத்தவரும் இவர்தான். 20 முறை சிறை சென்றும், இந்தி எதிர்ப்புப் போராட்டம் முதல் தமிழீழப் போராட்டம் வரை இவரது செயல்பாடுகள் தமிழர்கள் நடுவில் வியந்து போற்றப்படுகின்றன.

"என்மொழி, என்னினம், என்நாடு நலிகையில்
எதனையும் பெரிதென எண்ண மாட்டேன் - வேறு
எவரையும் புகழ்ந்துரை சொல்ல மாட்டேன்! - வரும்
புன்மொழி, பழியுரை, துன்பங்கள் யாவையும்
பொருட்டென மதித்துளம் கொள்ள மாட்டேன்! - இந்த(ப்)
பூட்கையில் ஓரடி தள்ள மாட்டேன்!''

என்று எழுதி அதன்வழி வாழ்ந்துகாட்டியவர் பாவலரேறு பெருஞ்சித்திரனார் ஆவார்.

**கல்வி:**


பெருஞ்சித்திரனார் பள்ளியில் பயிலும் காலத்தில் தமிழ் ஈடுபாட்டுடன் கற்றவர். "குழந்தை' என்னும் பெயரில் கையெழுத்து ஏட்டைத் தொடங்கி மாணவர் பருவத்தில் நடத்தியவர்.

# பாவலரேறு பெருஞ்சித்திரனார்

(கட்டுரை)

## கல்வி- திருமணம்:

பின்பு அருணமணி என்னும் புனைபெயரில் "மலர்க்காடு' என்னும் கையெழுத்து ஏட்டினை நடத்தினார். மல்லிகை, பூக்காரி என்னும் பாவியங்களைப் பள்ளிப்பருவத்தில் இயற்றிய பெருமைக்குரியவர்.



பெருஞ்சித்திரனார் 1950இல்பள்ளிப்படிப்பை நிறைவு செய்த பின்னர், சேலம் நகராட்சிக் கல்லூரியில் பயின்றார். பாவாணர் அங்குப் பணிபுரிந்தபொழுது அவர்தம் மாணவராக தமிழறிவு பெற்றார். இளமையில் பெருஞ்சித்திரனாருக்கு உலக ஊழியனார், காமாட்சி குமாரசாமி முதலானவர்களும் ஆசிரியர்பெருமக்களாக விளங்கினர்.

கல்லூரியில் பெருஞ்சித்திரனார் பயிலும் காலத்தில் பாவேந்தர் பாரதிதாசன் பாடல்களில் மிகுந்த ஈடுபாட்டுடன் விளங்கினார். எனவே தாம் இயற்றிய மல்லிகை, பூக்காரி என்னும் இரு பாவியங்களையும் எடுத்துக்கொண்டு பாவேந்தரைச் சந்திக்க புதுச்சேரி சென்றார். ஆனால் பாவேந்தர் அந்நூல்களைப் பார்க்க அக்காலத்தில் மறுத்துவிட்டதையும் பின்னர் ஒரு நூலைக் கொய்யாக்கனி எனும் பெயரில் அவரே அவர் தம் அச்சகத்தில் அச்சிட்டுத் தந்ததையும் பெருஞ்சித்திரனார் குறிப்பிடுவதுண்டு.

பெருஞ்சித்திரனார் கல்லூரியில் பயிலும் போது கமலம் என்னும் பெண்ணைத் திருமணம் செய்து கொண்டார். அப்பெண்ணே தாமரை அம்மையாராக இன்று மதிக்கப்படுபவர்.

# பாவலரேறு பெருஞ்சித்திரனார்

(கட்டுரை)

## தென்மொழி இதழும் எழுத்துப் பணியும்:

பெருஞ்சித்திரனார் புதுவையில் அஞ்சல் துறையில் முதன்முதலில்ஐந்து ஆண்டுகள் புதுவையில் வாழ்க்கை அமைந்தது. அக்காலத்தில் பாவேந்தருடன் நெருங்கிய தொடர்பு ஏற்பட்டது. 1959 இல் பெருஞ்சித்திரனாருக்குப் பணிமாற்றல் கிடைத்து கடலூருக்கு மாற்றப்பட்டார். இச்சூழலில் பாவாணர் அவர்கள் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில்அகரமுதலித் துறையில் பணியேற்றார். பாவாணர் விருப்பப்படி தென்மொழி என்னும் இதழை 1959இல் பெருஞ்சித்திரனார் தொடங்கி நடத்தினார். அரசுப் பணியில் இருந்ததால் தன் இயற்பெயரான துரை-மாணிக்கம் என்பதை விடுத்து பெருஞ்சித்திரன் என்னும் புனைப்பெயரில் எழுதினார்.

தென்மொழியின் தொடக்க ஏட்டில் சிறப்பாசிரியர் பாவாணர் எனவும் பொறுப்பாசிரியர் பெருஞ்சித்திரன் எனவும் பெயர்கள் தாங்கி இதழ் வெளியானது. தென்மொழியின் 16 இதழ்கள் வெளிவந்த சூழலில் பொருள் முட்டுப்பாட்டால் இதழ் இடையில் நின்றது. பின்பு கருத்துச் செறிவுடனும் புதுப்பொலிவுடனும் மீண்டும் வந்து கல்லூரி மாணவர்கள் தமிழாசிரியர்களால் விரும்பிப் படிக்கப்பட்டது.

இந்தி எதிர்ப்புப் போரில் தம் உரையாலும் பாட்டாலும் பெரும் பங்காற்றினார். தம் இயக்கப்பணிகளுக்கு அரசுப்பணி தடையாக இருப்பதாலும் முழுநேரம் மொழிப் பணியாற்றவும் நினைத்து அரசுப்பணியை உதறினார். இவர் எழுதிய பாடல்கள் இந்தி எதிர்ப்பு உணர்வைத் தூண்டுவதாக அரசால் குற்றம் சாற்றப்பெற்றது. வேலூர் சிறையில் அடைக்கப்பட்டார். சிறையில் இருந்தபோது ஐயை என்னும் தனித்தமிழ்ப் பாவியத்தின் முதல் தொகுதியை எழுதினார்.

# பாவலரேறு பெருஞ்சித்திரனார்

(கட்டுரை)

## தமிழ்த்தேசிய விடுதலைப் போராளி:

"விடுதலை வேண்டும் முதல் வேலை
எந்த வேலையும் செய்யலாம் நாளை"...

-மேற்படி பாடலில் பெருஞ்சித்திரனார் வேண்டிப் பாடிய விடுதலை என்பது தமிழ்நாடு விடுதலையைக் குறிப்பதாகும்.

1956ஆம் ஆண்டு மொழிவழித் தமிழகம் அமைந்த பிறகும் தனிக் கழகம் கண்ட அண்ணா திராவிடநாடு கோரிக்கையை கைவிடத் தயாரில்லை. இந்நிலையில் 1959ஆம் ஆண்டு தமிழ்மொழி முன்னேற்றம், இன முன்னேற்றம், தமிழ்நாடு விடுதலை ஆகிய மூன்று கொள்கையை முன் வைத்து தென்மொழி இதழை பெருஞ்சித்திரனார் தொடங்கினார்.

## இறுதி போராட்டம்:

1994இல் 'திராவிடர்' என்று சொல்வது தவறு என்றும், 'தமிழர்' என்றே குறிப்பிட வேண்டுமென்றும் தனது 'தமிழ் நிலம்' ஏட்டில் அறிக்கை விடுத்தார். தாழ்த்தப்பட்டோரை 'பழந்தமிழர்' என்றே குறிப்பிட வேண்டும். ஆதிதிராவிடர் என்றோ, ஹரிஜன் என்றோ, தலித் என்றோ அழைக்கக் கூடாது என்பதையும் தெளிவாகக் கூறி விளக்கமளித்தார்.

கடும் காய்ச்சல் கண்டு துன்ப நிலையில் இருந்த போதும் 24.4.95 இல் நடந்த தமிழே பயிற்றுமொழி, ஆட்சிமொழி என்று கூறி தலைநகர் தமிழ்க்கழகம் நடத்திய பேரணியில் கலந்து கொண்டு குடும்பத்தோடு தளைப்படுத்தப்பட்டார். அதுவே பெருஞ்சித்திரனார் இறுதியாகப் பங்கேற்றப் போராட்டமாகும்.

# பாவலரேறு பெருஞ்சித்திரனார்

(கட்டுரை)

## மறைவு:

இவரது படைப்புகள் அனைத்தும் அரசுடமை ஆக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடதக்கது

சளித்தொல்லை மிகுந்து, சிறுநீரகம் செயலிழப்புக்குள்ளான நிலையில் 11.6.1995 இல் இத்தமிழ்ப் பேருலகத்தை கண்ணீர் கடலில் மிதக்க விட்டு மறைந்தார்.



கவிஞர் குமர.தர்மசீலன்,இதழாசிரியர்



அகர முதல நாளை நமதே
அகர முதல
உரக்க சொல்வோம்
நமக்கு நாமே ஆறுதல் கூறும்
மன தைரியம் மற்றும்
நம்பிக்கை இருந்தால்
அனைத்தையும்
கடந்து போகலாம்..!
Aagaramuthalaa
www.அகரமுதல.com

அகமும் தமிழே! முதலும் தமிழே!!

"தனித்தியங்கும் தன்மை தமிழினுக் குண்டு
தமிழே ஞாலத்தில் தாய்மொழி பண்டு
கனிச்சாறு போற்பல நூலெலாம் கண்டு
காத்ததும் அளித்ததும் தமிழ்செய்த தொண்டு"

என்றும் தலைப்பணியாம் தமிழ்ப்பணியில்,

அகர முதல செய்திக்குழு | அகர முதல இலக்கிய பேரவை
அகர முதல கல்விக்குழு | சிவம் அறக்கட்டளை.


தொடர்பிற்கு:

9597887847/8870884969

www.அகரமுதல.com

Aagaramuthalaa

aagaramuthala@gmail.com